Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.125/2022 |
| Deposition of witness for Prosecution | : Lw1/Pw1 |
| Name | : சுதாகர் |
| Father Name/Husband Name | : ராமதாஸ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 10.02.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் கடலூர் மாவட்ட சைபர் கிரைம் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 22.09.2020 ம் ஆண்டு காவல் துறை கூடுதல் இயக்குநர் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பிரிவு மற்றும் கோவை சரகம் காவல் கண்காணிப்பாளர் மற்றும் கோவை சரக காவல் துறை துணை தலைவர், கோவை சரக காவல் தலைவர் அவர்களின் கடிதத்தின் படி National center for

Missing and exploited children அவர்களின் கடிதத்தின் படி 05.01.2019 அன்று மெர்வின் த.பெ ஜான் பிரிட்டோ கடலூர் என்ற நபர் இணையதளத்தில் குழந்தைகளுக்கு எதிரான ஆபாச படத்தை தனது செல்போனில் பதிவிறக்கம் செய்து பார்த்து அதை தனது முகநூல் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார் என்பது எனது விசாரணையில் தெரியவந்துள்ளது. எனவே ஆஜர் எதிரியின் மீது கடலூர் புது நகர் காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். எதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**எனது கையொப்பத்துடன் கூடிய புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) கடலூர் புதுநகர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்மந்தமாக யார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் புதுநகர் காவல் துறை ஆய்வாளர் உதயகுமார் கடலூர் சைவர் கிரைம் அலுவலகத்தில் வைத்து 22.09.2020 அன்று விசாரித்தார்கள். இது சம்மந்தமாக நான் யாரையும் விசாரணை

செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடந்த நாள் 05.01.2019. இவ்வழக்கு சம்மந்தமாக நான் புகார் கொடுத்தது 22.09.2020 இந்த வழக்கு சம்மந்தமாக சைபர் கிரைம் போலீசாரே வழக்கு பதிவு செய்திருக்களாம் என்று சொன்னால் IT Act ன் படி காவல் ஆய்வாளர் தான் விசாரணை செய்ய வேண்டும். இந்த வழக்கின் புகாரினை பெற்று யார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் புதுநகர் காவல் நிலையத்தில் உள்ள காவல் உதவி ஆய்வாளர் இப்புகாரினை பெற்று வழக்கை பதிவு செய்தார். அதன் தொடர்ச்சியாக கடலூர் புதுநகர் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். அந்த சமயத்தில் சைபர் கிரைம்-ல் நான் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்று சொன்னால் சரிதான். 22.09.2020 ம் ஆண்டு காவல் துறை கூடுதல் இயக்குநர் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பிரிவு மற்றும் கோவை சரகம் காவல் கண்காணிப்பாளர் மற்றும் கோவை சரக காவல் துறை துணை தலைவர், கோவை சரக காவல் தலைவர் அவர்களின் கடிதத்தின் படி National center for Missing and exploited children. மேற்படி கடிதங்களை புகார் கொடுக்கும் போதோ விசாரணையின் போதோ போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கும் போது புதுநகர் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 1 ல் தேதி மற்றும் நேரம் பேனாவால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். National center for Missing and exploited children ல் இருந்த வந்த தகவலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் ஆய்வாளரிடம் சொன்னேன் அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார். IP Address விவரங்கள் ஆய்வாளரிடம் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். இந்த ஆபாச படத்தை எதிரி பதிவிறக்கம் மற்றும் பதிவேற்றம் செய்துள்ளார் என்ற நிலையில் அந்த ஆபாச படத்தை யார் உருவாக்கினார் என்ற விவரத்தை கண்டுபிடித்தேனா என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை அதனால் நான் அதை பற்றி விசாரிக்கவில்லை. எதிரி அந்த ஆபாச படத்தை யார் யார்க்கெல்லாம் அனுப்பினார் என்றால் எதிரி அந்த படத்தை அவரது முகநூல் பக்கத்தில் பதிவு செய்தார் அந்த பதிவு Public view ல் இருந்ததால் அந்த படத்தை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். அந்த எதிரியின் முகநூல் பக்கத்தை வேறு யாரேனும் பயன்படுத்தலாமா என்றால் முடியாது அவ்வாறு வேறு நபர் எதிரியின் பக்கத்தை பயன்படுத்தி ஆபாச படத்தை பதிவேற்றம் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்மந்தமான ஆபாச படத்தை CD ல் பதிவு செய்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, விசாரணை அதிகாரி செய்திருப்பார். இவ்வழக்கில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை சரிவர பின்பற்றாமல் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்க்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தகவல் தொழிற் நுட்ப சட்டத்தின் கீழ் புள்ளி விவரத்திற்காக பொய்யாக போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.